**R 2073 (page 291)** தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்

# அனைத்திலும் இச்சையடக்கம் உடையவர்களாய் இருங்கள்

## "BE TEMPERATE IN ALL THINGS."

### நீதிமொழிகள் 23:15-25

"குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும்." (நீதிமொழிகள் 23:21)

**(R2074 : page 292)**

[வசனம் 22-23] உண்மையான ஞானமானது முதியவர்களின் ஆலோசனையை, அதிலும் விசேஷமாகக் குழந்தையின் நலனுக்கடுத்த விஷயங்களில் அக்கறைகொண்டிருக்கும் பெற்றோர்களின் ஆலோசனையை ஒருபோதும் அசட்டை செய்யாது. இது நம்முடைய நாட்களில் காணப்படும் விநோதங்கள் மற்றும் சிரமங்களில் ஒன்றாய் இருக்கின்றது; காரணம் அறிவிலும், கல்வி வாய்ப்புகளிலும் ஏற்பட்ட திடீர் பெருக்கத்தின் காரணமாய் அநேகம் அறிவுசார்ந்த துறைகளில் இளைஞர்கள், பெரியவர்களைக் காட்டிலும் மிஞ்சிக் காணப்படுகின்றனர். இதன் விளைவான மனப்பான்மையானது பெற்றோர்கள் மற்றும் பெரியவர்களின் அறிவுரைகளுக்கும், அனுபவங்களுக்கும் மதிப்புக்கொடுக்காத மனப்பான்மையாகவும், முரட்டுத்தனமான, தலைக்கனமான, நன்றியற்றத்தனமான, பரிசுத்தமற்றத்தனமான, பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியாதத் தன்மையாகவும் மற்றும் நம்முடைய நாட்களின் அம்சங்களாய்க் காணப்படும் என்று அப்போஸ்தலனால் முன்னுரைக்கப்பட்டதுபோன்ற இழிவான தன்மையாகவும் காணப்படுகின்றது (2 தீமோத்தேயு 3:4-ஆம் வசனத்தைப் பார்க்கவும்). இதன் காரணமாய் இளையவர்களின் அறிவுரையாளர்கள் அனைவரின் சார்பிலும், பெற்றோர்களின் சார்பிலும் அதிகம் ஞானமும், அதிகம் பொறுமையும் அவசியமாய்க் காணப்படுகின்றது. பெற்றோரின் அறிவுரைகளை எதிர்க்கும் செல்வாக்குகளை அடையாளம் கண்டுகொண்டவர்களாகவும், பிள்ளைகள் சில விஷயங்களில் மேம்பட்டுக் காணப்படலாம் எனும் உண்மையினை அடையாளம் கண்டுகொண்டவர்களாகவும் காணப்படும் ஞானமுள்ள பெற்றோர், தங்களில் தகுதியான சிறுபிள்ளைக்குரிய தன்மையினை நல் உதாரணமாய் முன்வைத்துக் காண்பித்திட நாடிட வேண்டும்; மேலும் குழந்தையிடமிருந்தும், குழந்தையோடும்கூட அவர்களது மேம்பட்ட அனுகூலங்களின் அடிப்படையில் கற்றுக்கொள்வதற்கும் ஆயத்தமாய் இருக்க வேண்டும்; மேலும் அறிவு பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளின் தற்காலத்து அதிகரிப்பானது குறிப்பிடத்தக்கது என்றும், அது மனுஷனால் உண்டாயிராமல் "முடிவு காலம்" தொடர்பாகத் தீர்க்கதரிசிகளினால் முன்னுரைக்கப்பட்டதுபோலத் தேவனால் உண்டானது என்றும் பெற்றோர் விவரித்துக்கொடுக்க வேண்டும் (தானியேல் 12:4). இப்படிப்பட்ட ஞானமுள்ள மற்றும் நேர்மையுள்ள நடக்கையின்மூலம் பெற்றோர் தன் பிள்ளையின் நம்பிக்கையைத் தக்கவைத்துக்கொள்வான்; பிள்ளையும்கூட ஜீவியத்திலுள்ள பெற்றோரின் அனுபவங்களுடைய அடிப்படையிலும், நல்லொழுக்கத்தின் கொள்கைகள் தொடர்பாகவும், தீய ஒழுக்கத்தின் தீமைகள் தொடர்பாகவும் கற்றுக்கொள்வதற்கு நன்கு ஆயத்தமாய் இருக்கும். இப்படியாகப் பெற்றோரிடத்தில் காணப்படும் ஞானமானது, பிள்ளையினால் தெரிந்தெடுக்கப்படும் ஞானத்தின் விஷயத்திற்கு மிகவும் அவசியமானதாய்க் காணப்படுகின்றது. போதிக்கப்பட வேண்டிய பிரதானமான பாடங்களில் ஒன்று - ஜீவியத்தின் அன்றாடக் காரியங்கள் தொடர்புடைய விஷயத்திலும், மனுஷர்களுக்கிடையிலான நடவடிக்கையின் விஷயங்களிலும், ஆவிக்குரிய காரியங்களின் விஷயத்திலும், தேவன் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் மற்றும் தெய்வீகத் திட்டம் சம்பந்தப்பட்ட விஷயத்திலும் - அனைத்து விஷயங்களுக்கு மேலாக சத்தியமே விலையேறப்பெற்றதாய்க் காணப்பட வேண்டும் என்பதேயாகும். சத்தியம் உயர்வாய்க் கருதப்பட வேண்டும் மற்றும் சத்தியத்தை அன்புகூர்ந்து அதன்படி நடக்கிறவர்கள் - இவர்கள் மாத்திரமே உயர்வாய் மதிக்கப்பட வேண்டும்; தப்பறைகளும், போலித்தனங்களும் அவைகள் எவ்வளவுதான் பகட்டாக அல்லது ஆடம்பரமாக அல்லது கண்ணைக் கவரும் விதமாக இருப்பினும் அவை அசட்டைப்பண்ணப்பட வேண்டும் மற்றும் புறக்கணித்து விலக்கப்பட வேண்டும். இது "(தீமையினின்று அவர்களைப் பிரித்து, நன்மைக்காய்ப் பிரித்துவைத்து) உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்ற நமது கர்த்தருடைய ஜெபத்திற்கு இசைவாய் இருக்கின்றது (யோவான் 17:17).

[வசனம் 24-25] இந்த வசனங்களானது வாலிபரில் உள்ள ஞானமானது, போதனையையோ, அறிவுரையையோ முற்றிலும் சார்ந்திருப்பதில்லை என்று தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அநேகமாகப் பெரும்பான்மையான ஞானமுள்ள பிள்ளைகள், ஞானமானவர்களாகவே பிறந்துள்ளனர். "ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன், அவனால் மகிழுவான்" (நீதிமொழிகள் 23:24). பெற்றோர் ஸ்தானத்தைக்குறித்தும் மற்றும் தங்கள் சொந்தக் குணங்களும், மனஉணர்வுகளும் தங்கள் பிள்ளைகளிடத்தில் தாக்கம்கொண்டிருந்து, பிள்ளைகள் பிறப்பதற்கு முன்னதாகவே நல்ல மற்றும் ஞானமுள்ள குணங்களுக்கான அஸ்திபாரங்களைப் போடுகின்றது என்பது குறித்தும் பெற்றோர்களினால் உணர்ந்துகொள்ள முடிந்ததானால், அவர்களது ஸ்தானம் மற்றும் உறவுமுறையின் பொறுப்புகளானது, அவர்களது பிள்ளைகளிடத்தில் அநுகூலமான செல்வாக்கினைக்கொண்டிருப்பது மாத்திரமல்லாமல், அவர்களிலும் உறுதியான குணங்களை வளர்த்திடுவதற்கு உதவியாய் இருந்திடும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

எந்த இயற்கையின் சட்டங்களுக்குக்கீழாகத் தங்கள் பிள்ளைகளைப் பெற்றெடுக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ள தவறிடும் பெற்றோர்கள், தங்களின் ஞானமின்மையையும், உறுதியற்ற குணங்களையும் பிரதிப்பலித்திடும் தங்கள் பிள்ளைகளிடத்தில், அதாவது தங்கள் பிள்ளையின் ஞானமின்மை விஷயத்தில் பொறுமைக்கொண்டிருப்பதற்கு இரட்டிப்பான காரணங்கள் பெற்றிருக்கின்றனர்; மேலும் அந்த ஞானமின்மையைச் சரிப்படுத்துவதற்கும், பிள்ளைகளைச் சரியான பாதையில் வழிநடத்திடுவதற்குமான தங்களது பிரயாசங்களில் விடாமுயற்சியுடன் காணப்படுவதற்கும் இரட்டிப்பான காரணம் கொண்டிருக்கின்றனர்.

---

See more Books & Articles at www.foodfornewcreature.com